## 30.3 நியமனக் குழுக்கள் மூலமாக பணியாளர்களை தேர்ந்தெடுத்தல்

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 312 நாள் : 30.11.2000

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 336, ஊ.வ.துறை, நாள்–26.11.97.
2. அரசாணை (நிலை) எண். 191, ஊ.வ.துறை, நாள்–07.09.98.
3. அரசாணை (நிலை) எண். 19, ந.நி (ம கு.வ.துறை,) நாள்–19.1.99.
4. அரசாணை (4டி) எண். 2, தொ (ம) வே.வா.துறை, நாள்–16.2.99.
5. அரசாணை (நிலை) எண். 114, ஊ.வ.துறை, நாள்–06.05.2000.

**ஆணை**

ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 96 (1) (எ)ன்படி, ஊராட்சி ஒன்றியப் பணியமைப்பில் அரசுப் பணியாளர் தேர்வாணைய வரம்புக்குட்பட்டவை தவிர ஏனைய ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்படும் பணியிடங்களில் நேரிடை நியமனம் மூலம் பணியாளர்களை தேர்வு செய்வதற்கான நியமனக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள் நியமனக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான விதிமுறைகள் படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் வெளியிடப்பட்டன. நேரிடை நியமனம் மூலம் காலி பணியிடங்களை நிரப்ப பணியாளர்களை தேர்வு செய்ய ஊராட்சி ஒன்றியப் பணியாளர் நியமனக் குழு கடைப்பிடிக்க வேண்டிய திருத்திய நெறிமுறைகள் படிக்கப்பட்ட அரசாணை ஐந்தில் வெளியிடப்பட்டன.

2. படிக்கப்பட்ட அரசாணை நான்கில், கூட்டுறவு, கல்வி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் தவிர மற்ற அனைத்து துறைகளிலும் காலிப் பணியிடங்களை நிரப்ப வேலை வாய்ப்பகங்கள் பரிந்துரைக்கும் நபர்கள் பட்டியல் 1:5 என்ற விகிதத்தில் அதாவது ஒரு காலி பணியிடத்திற்கு ஐந்து நபர்கள் என்ற அடிப்படையில் இருக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணி நியமனத்திற்காக வேலை வாய்ப்பகங்கள் அனுப்பும் நபர்கள் பட்டியல் ஒரு காலி பணியிடத்திற்கு இரு நபர்கள் அதாவது 1:2 என்ற விகிதத்தில் இருக்க வேண்டும் என்றும் நியமனக் குழுக்கள் எழுத்துத் முறை தேர்வு, நேர்காணல் என்று நடத்தி மதிப்பெண்கள் கொடுக்காமல் சான்றிதழ்களை மட்டும் சரிப்பார்த்து வேலை வாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையில் தகுதி உள்ளவர்களுக்கு நியமன ஆணைகள் கொடுக்க வேண்டும் என்றும் படிக்கப்பட்ட அரசாணை மூன்றில் ஆணையிடப்பட்டது.

3. ஊரக உள்ளாட்சி அமைப்புகளிலும் பணியாளர் நியமனக் குழுக்கள் நேரிடை நியமன முறையில் பணியாளர்களை தேர்வு செய்து நியமிக்க வேலை வாய்ப்பகங்களிலிருந்து பெறப்படும் நபர்கள் பட்டியல் ஒரு காலிப்பணியிடத்திற்கு இரு நபர்கள் அதாவது 1:2 என்ற விகிதத்தில் இருந்தால் போதுமானது என்றும், எழுத்து முறைத் தேர்வு, நேர்காணல் என்று நடத்தி அதற்கு மதிப்பெண்கள் அளித்து தேர்வு செய்யாமல், சான்றிதழ்களை மட்டும் சரிப்பார்த்து பணிவிதிகளையும் படிக்கப்பட்ட அரசாணை ஐந்தில் உள்ள நெறிமுறைகளையும் கடைப்பிடித்து வேலை வாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையில் தேர்வு செய்து நியமன ஆணைகள் அளிக்க வேண்டும் என்றும் அரசு தற்பொழுது முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகின்றது.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் (ம) வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண். 246 / எஸ். (எல்.இ.)/2000, நாள்–25.09.2000ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இந்த அரசாணையின் நகலை அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மாவட்ட ஆட்சியர்கள் அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்